ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:
ஸ்ரீமத் அநந்தார்ய மஹாகுரவே நம:
ஸ்ரீமத் வரவரமுனயே நம:



# ஸ்ரீ மதுரகவியாழ்வார் அருளிச் செய்த கண்ணிநுண்சிறுத்தாம்பு முதல் பாசுர வ்யாக்யான சாரம்

நஞ்ஜீயர், நம்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானத்திலிருந்து திரட்டியது

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

அடியேன் மதுரகவி தாசன்
திருமலை குன்னபாக்கம் அனந்தாண்பிள்ளை வேங்கடார்யன்

http://www.acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமானுஜாய நம:
ஸ்ரீமத் அநந்தார்ய மஹாகுரவே நம:
ஸ்ரீமத் வரவரமுனயே நம:

# கண்ணிநுண்சிறுத்தாம்பு முதல் பாசுர வ்யாக்யான சாரம்

நஞ்சீயர், நம்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானத்திலிருந்து திரட்டியது

கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன் என்னப்பனில்
நண்ணித் தென்குருகூர் நம்பியென்றக்கால்
அண்ணிக்கும் அமுதூறும் என்னாவுக்கே

அர்த்தம்:
முடிச்சுகள் பலவும், நுண்ணியதாயும், சிறிதாயும் இருக்கும் ஒரு கயிற்றினால் தன்னைக் கட்டும்படி யசோதைப் பிராட்டிக்கு இடம் கொடுத்த ஆச்சரிய சக்தி உடையவனும், எனக்கு ஸ்வாமியுமான ஸர்வேச்வரனை விட்டு, குருகூர் நம்பியான நம்மாழ்வாரை ஆச்ரயித்து அவரது திருநாமத்தைச் சொன்னால் அது இனிமையாகவும் அதைச் சொன்ன என் ஒருவனுடைய நாவில் அமுது ஊறிக்கொண்டேயும் இருக்கும்.

வ்யாக்யான சாரம்:
நம்மாழ்வார் முதலிலிருந்து இறுதி வரை இவருக்கு எல்லாம் ஆனதை இப்பாட்டில் பேசுகிறார். நம்மாழ்வார் எவ்விடத்தில் மோஹித்துக் கிடந்தாரோ ("உரலினோடு இணைந்திருந்தேங்கிய எளிவு எத்திறம்") அவ்விடத்தைப் பற்றியே இவரும் பேசுகிறார். நம்மாழ்வார் தமக்கு உகந்த வஸ்துவாய் ரசித்ததைச் சொல்கிறார்.

கண்ணிநுண்சிறுத்தாம்பு:
ஸ்ரீக்ருஷ்ணனை யசோதைப் பிராட்டி கட்டி விட்ட கயிறானது பல முடிச்சுகள் கொண்டதாகவும் சிறிதாகவும் இருந்தது. தன்னுடைய தளிர் கைகளால் அதை அவிழ்க்க மாட்டானாதலால் திருமேனியில் உறுத்துமே என்று ஸ்ரீமதுரகவி ஆழ்வார் அஞ்சுகிறார்.

நம்மாழ்வார் உகந்த விஷயமான ஸ்ரீக்ருஷ்ணனைக் கட்டிய கயிற்றை ஆராயும் அளவிற்கு இவர் பகவத் விஷயத்தை விட்டார்.

கண்ணித்தாம்பு:
உடம்பில் உறுத்தும்படி பல முடிச்சுகள் கொண்ட கயிறு.

நுண்தாம்பு:
உடம்பில் அழுந்திப் போகும் அளவிற்கு நுண்ணிய கயிறு.

சிறுத்தாம்பு:
அனைத்தையும் தன் உடம்பில் அடக்கியவனைக் கட்ட எத்தனை பெரிய கயிறும் போதாது ("சதைகரூபரூபாய"); ஆனாலும் சிறு கயிற்றால் கட்டுண்டான் ("கண்ணியார் குருங்கயிற்றால் கட்ட").

கட்டுண்ணப் பண்ணிய:
சம்ஸாரத்தில் அகப்பட்டிருக்கும் அனைவரையும் கட்டவும் விடுவிக்கவும் காரணமானவன் ("சம்ஸார பந்தஸ்திதி மோக்ஷஹேது:") ஒரு அபலை கட்டிய கயிற்றை அவிழ்க்க சக்தி இல்லாமல் இருக்கிறான்.
எல்லாருடைய கர்மமென்னும் கட்டை அவிழ்ப்பவன் கட்டுண்டு கிடக்கிறான்.
அவனுடைய அருளினால் உண்டான கட்டேயானாலும் அவனாலேயும் அதை அவிழ்க்க இயலாது.
சர்வசக்தி உடையவன் ஒரு சிறு கட்டை அவிழ்க்கும் சக்தியையும் விட்டான்.
எல்லோரையும் தன்னைச் தொழச் செய்பவன் தான் இன்று தொழுது நின்றான். சம்ஸாரக் கடலில் கரை காணாமல் கட்டுண்டு கிடப்பவற்கு தொழுதலே வழி என்று உணரும் வண்ணம் நின்றான்.

பெருமாயன்:
அவன் மாயையை எல்லை காண முடியாது. இவ்வாறு அகப்பட்டு கட்டுண்டு அடியுண்டு சர்வ சக்தன் அசக்தியோடு கிடக்கும் மாயையைச் சொல்லுகிறார்.

சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்பண்ணிய பெருமாயன்:
எத்தனை பெரிய கயிறாலும் ஒரு சுற்று கூட கட்ட முடியாத திருமேனியை சிறு கயிற்றால் இரு சுற்று கட்டும்படி இடம் கொடுத்தான். அவனுடைய மேன்மையை எல்லை காணலாம்; ஆனால் அவனுடைய எளிமையை எல்லை காண முடியாது.

என்னப்பன்:
ஆசார்யருக்கு ருசியான விஷயமாகையாலே ஸ்ரீக்ருஷ்ண அவதாரத்தைப் பற்றி மதுரகவி ஆழ்வார் பேசுகிறார். ஆசார்ய அங்கீகாரத்துக்காக தமக்கும் ஒரு சம்பந்தத்தை என் அப்பன் என்று சொல்லுகிறார்.
பகவத் விஷய சம்பந்தத்தை அடியோடு விட்டாராகில் நம்மாழ்வாரிடம் சம்பந்தம் சொல்ல இயலாதாகையால் அவனிடம் ஒரு சம்பந்தம் சொல்லுகிறார்.

என்னப்பனில் நண்ணி:
அவ்வாறு அவனருகில் நிற்கும் போதும் நம்மாழ்வாரைக் கிட்டுகிறார்.
ஞானி எல்லா விஷயங்களையும் விட்டு பகவத் விஷயத்தை அடையும் அருமையை இவர் பகவத் விஷயத்தை விட்டு நம்மாழ்வாரை அடைவதில் காணுகிறார்.
தோஷ சம்பந்தமான எல்லா விஷயங்களையும் விட்டு அவனை அணுகுவதே அரிது. தோஷமே இல்லாத அவனையும் விட்டு ஆசார்யரைப் பற்றுவது அரிதிலும் அரிது. அடைவதில் இறுதியாக இருக்கும் இதைப் பற்றுவார்க்கு முதலில் இருக்கும் அவனை மட்டும் பற்றுவதும் குறை என்கிறார்.

நண்ணி:
அவனை அடைவதற்கு மற்றைய விஷயங்கள் விரோதி ஆனதைப் போலே நம்மாழ்வாரை அடைந்த இவருக்கு பகவத் விஷயமும் விரோதி ஆனது.

தென்குருகூர்நம்பி:
அடைய விரும்பும் விஷயத்தில் அவன் முதலில் இருப்பதால் அவனை முற்றும் பேசாமல் இறுதியில் இருக்கும் ஆசார்யரை பூர்ணராகப் பேசுகிறார்.
பகவத் விஷயத்தைப் பற்றினால் அதின் எல்லையான நம்மாழ்வார் அளவு வர வேண்டியிருக்கும். பூர்ணரான ஆழ்வாரைப் பற்றினால் அதுவே போதும் என்கிறார்.

என்றக்கால்:
அவன் விஷயத்தில் மனம், வாக்கு, உடல் மூன்றினாலும் லயிக்க வேண்டும். ஆசார்யன் விஷயத்தில் சொல் ஒன்றே போதும்.

அண்ணிக்கும்:
தித்திக்கும். பகவத் விஷயத்தை முழுவதும் அனுபவித்து நம்மாழ்வார் பெற்ற ஆனந்தத்தை இவர் ஒரு சொல்லாலே பெற்றார்.

அமுதூறும்:
இவ்வமுது ஊறிக் கொண்டே இருக்கும். அவனை அடைந்த பின் திரும்புவது இல்லாததைப் போல ("ந ச புனராவர்த்ததே") இவ்விஷயமும் நித்யம்.

அண்ணிக்குமமுதூறும்:
ரசமான பொருட்களை வாயில் இட்டால் பொருள் உள்ளே சென்ற பின் ருசி இருக்காது. ஆனால் ஆசார்யன் விஷயத்தை உள்ளில் இட்டால் அது அமுது ஊறிக் கொண்டே இருக்கும்.

என்னாவுக்கே:
இவ்விஷயம் மற்றவர்களுக்கு உகக்கவில்லையே என்றால், முதலடியான பகவத் விஷயமே உகக்காதவர்களுக்கு அதின் எல்லையான ஆழ்வாரளவு உகக்குமோ என்று தன் நாவுக்கே என்று சொல்கிறார்.

மதுரகவி ஆழ்வார் திருவடிகளே சரணம்
நஞ்சீயர் நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

அடியேன் மதுரகவி தாசன்
திருமலை குன்னப்பாக்கம் அனந்தாண்பிள்ளை வேங்கடார்யன்